**செய்தி வெளியீடு எண் : 370** **நாள் : 23.02.2023**

<u>செய்தி வெளியீடு</u>

**<u>தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்தும், இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தியும் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம்.</u>**

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் இன்று (23.02.2023) நடத்திய தாக்குதல் சம்பவத்தை மிகுந்த வேதனையுடன் சுட்டிக்காட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். இத்தாக்குதல் நமது மீனவர்கள் மீது இலங்கை நாட்டினர் 15.02.2023 அன்று நடத்திய சில நாட்களுக்குள் நிகழ்ந்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியைச் சேர்ந்த 6 மீனவர்கள் கடந்த 21.02.2023 அன்று தரங்கம்பாடி மீனவ கிராமத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றதாகவும், பாரம்பரிய கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இன்று (23.02.2023) அதிகாலை 4.30 மணியளவில் இலங்கைக் கடற்படையினர் அவர்களை இரும்பு கயிறுகளைக் கொண்டு தாக்கியதாகவும் அவர்களின் மீன்பிடி உபகரணங்கள், இரண்டு பேட்டரிகள், என்ஜின் மற்றும் ஜி.பி.எஸ் கருவிகளை எடுத்துச் சென்றுவிட்டனர் என்றும், இத்தாக்குதலில் காயமடைந்த ஐந்து மீனவர்கள் தரங்கம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல், அனைத்து சர்வதேச விதிமுறைகள் மற்றும் மரபுகளை அப்பட்டமாக மீறுவதாகவும், பாக் வளைகுடா பகுதியில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை இலங்கைக் கடற்படை தொடர்ந்து மீறி வருவதுடன், நமது மீனவர்களுக்கு கடுமையான காயங்களையும், பொருளாதார இழப்புகளையும் அடிக்கடி ஏற்படுத்துவதையும் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கை கடற்படையினரின் இத்தகைய வன்முறைச் செயல்கள் அதிர்ச்சியளிப்பதுடன், கண்டனத்திற்குரியது என்றும் தெரிவித்துள்ளார்.

நமது மீனவர்கள் தமது வாழ்வாதாரத்திற்காக மீன்பிடிப்பதை மட்டுமே நம்பியுள்ளனர் என்றும், மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல்கள் நடத்தப்படுவது மீனவர்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரத்தை இலங்கை அரசிடம் வலுவாக எடுத்துச் சென்று, நமது இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தடுக்க உயர்மட்ட அளவில் உறுதியான மற்றும் ஒருங்கிணைந்த தூதரக வழிமுறைகள் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**Text of the D.O. Letter of, Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru M.K. Stalin addressed to the Hon'ble Union Minister of External Affairs Dr.S.Jaishankar regarding the incident of attack by the Sri Lankan Navy on Tamil Nadu Fishermen.**

With a deep sense of anguish, I write this to intimate you about yet another incident of attack by the Sri Lankan Navy on six Indian fishermen on 23.02.2023. This has happened within few days after the recent incident of attack on our fishermen by some Sri Lankan nationals on 15.02.2023.

The six fishermen belonging to Tharangambadi, Mayiladuthurai District ventured into the sea for fishing on 21.02.2023 from Tharangambadi fishing hamlet. While the fishermen were engaged in fishing in the traditional sea waters, they were brutally attacked with iron rope by the Sri Lankan Navy personnel at around 4.30 a.m. on 23.02.2023. They have also taken away the fishing tools, engine, two batteries and GPS equipment. The five fishermen injured in the attack have been admitted in Government hospital, Tharangambadi for treatment. This attack is a blatant violation of all international norms and conventions.

As you may have observed, the Sri Lankan Navy continues to infringe upon the traditional rights of our fishermen in the Palk Bay area and causes severe injuries and economic losses to our fishermen frequently. The brazen acts of violence by the Sri Lankan Navy are shocking and condemnable. As you are aware, our fishermen are solely dependent on fishing for their livelihood and the frequent attacks on them instills fear and panic among the fishing hamlets.

I urge you to take this up strongly with the Sri Lankan Government and also request you to prevail upon them through appropriate diplomatic channels for initiating strong and coordinated efforts at the highest level to stop attacks on our Indian fishermen.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in